பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருதி, இந்தப் பதப்படுத்தும் தொழிற்சாலை அவசியம் தேவை என்பதைக் கருதி அரசு இதிலே ஆர்வம் காட்டுமா, உடனடியாக அந்தப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறையில் பல்வேறுபட்ட புதிய மாறுதல்களை உருவாக்கி வருகிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு அதிகமான கவனம் எடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இதுபோன்ற தொழில்களைத் தொடங்குவதற்கு முன்வருவார்களானால் அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு அளிக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *131*, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

131—

ஆதிதிராவிடர் மாணவ விடுதி

***7385—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 28]

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதியை அரசு சொந்தக் கட்டடத்தில் இயங்க, எந்த அரசும் செய்யாத சிறப்புத் திட்டம் கொண்டுவந்து, செயலாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதி தனித் தொகுதி என்பதாலும் அங்கு அதிகம் ஆதிதிராவிட மக்கள் வசித்து வருவதாலும், அந்த மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதியில் போதிய கட்டட வசதியும், அடிப்படை வசதிகளும் உள்ளதாலும் அம்மாவின் அரசு வரும் நிதியாண்டிலாவது மறுபரிசீலனை செய்து மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தித்தர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் 731 மாணவர் விடுதிகளும், 345 மாணவியர் விடுதிகளும், ஆக மொத்தம் 1,076 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் 51,762 மாணவர்களும், 24,538 மாணவியர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாணவ, மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக உணவும், தங்கும் இடமும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வந்த உணவுக் கட்டணத்தை 5-12-2001 முதல் மாதம் ரூ.225-விருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். உணவுக் கட்டணமாக ஆண்டிற்கு ரூ.24.10 கோடி செலவிடப்படுகிறது. ஒவ்வொரு விடுதியிலும் குறைந்தபட்சம் 50 மாணவர்கள் தங்கிப் பயின்று வருகின்றனர். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மூலம் ஆரோக்கியமான சூழ்நிலையில் மாணவர்கள் தங்கிப் படிக்கவேண்டுமென்று அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய விடுதிக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டு வருவதாலும், மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை உயர்த்தியதாலும், ஆதிதிராவிட மாணவர்கள் அனைவருக்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கவேண்டுமென்கிற ஆர்வம் இருந்து வருகிறது. இருந்தாலும், தற்போது நிலவிவரும் கடுமையான நிதி நெருக்கடியின் காரணமாக இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 மார்ச் 28

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாரமலை:

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னார்கள். பொதுவாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒவ்வொரு ஹாஸ்டலிலே மாணவர்களைச் சேர்க்கின்ற காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் அரசு அனுமதி பெறாமலேயே 10 சதவிகிதத்தை உயர்த்திச் சேர்த்துக்கொள்ளலாம், அந்த விவரம் அரசுக்கு வந்தபின்னாலே அதை ratify பண்ணுவார்கள். 50 பேர் வைத்து ஆரம்பித்த மாணவர்கள் இல்லங்களில் 5 ஆண்டுகளிலே 70, 80 என்று எண்ணிக்கை உயர்ந்து போய்க்கொண்டு இருந்தது. ஆனால், இப்போது அது தலைகீழாக மாற்றப்பட்டு, 10 சதவிகிதத்தை எடுக்கிறார்கள். ஓர் ஆண்டு என்று சொல்லி வருடம் முடிந்த உடனேயே அவர்கள் நீக்கப்பட்டு விடுகிறார்கள். மீண்டும் பத்து சதவிகிதம் சேர்க்கப்படுகிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வது ஒவ்வோர் ஆண்டும் 10 சதவிகிதம் அந்த எண்ணிக்கையின்மேல் சேர்ப்பதற்கு, அதை அதிகரித்துக் கொடுப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இப்படிப்பட்ட விடுதிகளில் ஏதாவது ஒரு விடுதியில் மாணவர்கள் குறைவாகச் சேர்க்கப்படுவார்களேயானால், மற்ற விடுதிகளுக்கு, குறிப்பாக குறைந்தபட்சம் 50 மாணவர்களுக்குண்டான அந்த விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மற்ற விடுதிகளுக்கு அந்த ஈடு செய்துகொண்டு வருவது வழக்கமாக இருந்து வருகிறது. இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் இப்படிப்பட்ட நவீனமான விடுதிகளைக் கட்டிக் கொடுப்பதாலும், உணவுக் கட்டணத்தை உயர்த்தியதாலும், எல்லா இடங்களிலும் அனைத்து மாணவர்களும் அதிகமான அளவிற்கு, எண்ணிக்கை அதிகமான அளவிற்கு விரும்பிப் படிப்பதற்கு, விடுதியிலே தங்கிப் படிப்பதற்கு வருகை தந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் தகுதிக்கு ஏற்ப அந்த மாணவர்களுடைய குடும்பத்தினுடைய சூழ்நிலைக்கு ஏற்ப, நலனுக்கு ஏற்ப இப்படிப்பட்ட மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆழ்ந்து ஆய்வு செய்து வருகிறது.

2003 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். நிலைமைகளையும் சொல்கிறார்கள். புரிந்துகொள்கிறேன். ஆதிதிராவிட மாணவர்களுக்கான விடுதிகளில், பல இடங்களில் இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, மனுதாரர்கள் அளிக்கின்ற மனுவைப் பொறுத்தும், அதனுடைய தகுதியைப் பொறுத்தும் பரிசீலித்து, இடம் கொடுப்பதற்கான முயற்சி என்ற அடிப்படையில் பார்த்தால்கூட ஆண்டுதோறும் அப்படிப்பட்ட இடப்பற்றாக்குறை ஏற்பட்டுகொண்டே இருக்கின்றது. குறிப்பாக, என்னுடைய மன்னார்குடி தொகுதியில் ஏழை மாணவர்கள் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட பிரச்சினைக்கும், சிரமத்திற்கும் உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல ஆண்டுதோறும் 10 சதவிகிதம் உயர்வு என்ற அடிப்படையிலே மாணவர்களை இணைப்பதற்கான முயற்சி எடுப்பது என்பதுதான் சாதாரண தாழ்த்தப்பட்ட பகுதி மாணவர்களுடைய படிப்பிற்கு உதவிகரமாக இருக்கும். குக்கிராமங்களுக்கு வந்து செல்வதற்கு உரிய வாய்ப்பு இல்லாத மாணவர்கள், படிப்பதற்கு வசதி ஏற்படும் என்ற முறையில் அரசு அதை மீண்டும் பரிசீலித்து மாணவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கான ஒரு பொதுவான உத்தரவினை இடுவதற்கான முயற்சியை அமைச்சர் மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பொத்தாம் பொதுவான குறிப்பை, ஒரு தவறான தகவலை இங்கே அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். அவருடைய மன்னார்குடி தொகுதியில் அதிகமான அளவிற்கு மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சொன்னார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இந்த அளவிற்கு மாணவர்கள் நவீன விடுதி கட்டடமாக இருப்பதால், அதிகமான அளவிற்கு வருகை தந்துகொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் இல்லையென்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டு வருவதால், அதனால் அந்த வறுமை நிலையிலே வாழ்ந்து வருகின்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயர்நிலைக்கு வருகின்ற நேரத்தில், இதுபோன்ற நிலைமைகள் வராது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை முடிகிறவரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 8 மற்றும் 9)*

(எட்டாவது பட்டியல்)

1—

மராமத்து செய்தல்

வினா 15807 திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, கசவன்குன்று-வாலம்பட்டி சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 3/0 சாலையை மராமத்து செய்து தார்ச்சாலையாகப் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 3/0 பகுதியினை தார் புதுப்பித்து மேம்படுத்தத் தோராயமாக ரூ.10.50 இலட்சம் தேவைப்படும். இப்பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத்

---

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.